1299

ஓம்.

தத். ஸத்.

விலக்ஷணாநந்தர்.

பூணு நூல்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
No.
10 DEC 1927
MADRAS

இஃது

திருநெல்வேலி, செக்கடித்தெரு,

ம. மாடசுவாமி மூப்பனர் அவர்களால்

திருநெல்வேலி,

மீரானியா அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பட்டது.

1927.

Q2:41)
M27.
53246

ஓம்.

தத். ஸத்.

விலக்ஷணானந்தர்

பூஜா நூல்.

இவை,
திருநெல்வேலி செக்கடித்தெரு,
ம. மாடசுவாமி மூப்பனர் அவர்களால்

திருநெல்வேலி,
மீரானியா அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1927.

ஓம்.

தத். ஸத்.

முகவுரை.

உபசார்ந்த உத்தம உன்னத ஆத்ம சகோதரர்களே!

ஸ்ரீ விலக்ஷணானந்தர் ஓர் நாள் பற்பல சாது ஜனங்களுடன் ஸ்ரீ ரெங்கக்ஷேத்திரத்திற்கு எழுந்தருளினார். அங்குள்ள சில வைஷ்ணவமதப் பிராமணப் பிடிவாதக்காரர்கள் ஸ்வாமிகளுக்குப் பூணூல் இல்லையே யென்றார்கள். அதற்குத் தனது அந்தரங்கப் பூணூலை அறிவிக்கும் பொருட்டு அதன் லக்ஷியமாக இந்நூலை அருளிச் செய்தனர்.

இங்ஙனம்,

பிரபோதபுத்தன்.

ஓம்.

தத். ஸத்.

விலக்ஷணானந்தர்

பூணு நூல்.

---

1. எங்கும் நிறைந்த நூல் எங்கள் நூலே
ஏகாந்தமான நூல் எங்கள் நூலே

2. பங்கப்படுத்தி விடும் எங்கள் நூலே
பார்ப்பவருக்கெட்டாதது எங்கள் நூலே

3 ஆதாரமற்றவிடம் எங்கள் நூலே
அத்தியுரி போர்த்ததுவு மெங்கள் நூலே

4. வாதாலுங் காணாதது எங்கள் நூலே
வந்தவழி காணுவது மெங்கள் நூலே

5. மார்பில் தரிப்பதில்லை எங்கள் நூலே
மனதில் தரிப்பதுவா மெங்கள் நூலே

6. சார்பைத் துலைத்துவிடு மெங்கள் நூலே
சத்துவங் கடந்ததுவு மெங்கள் நூலே

7. ஆகாரமற்றவிடம் எங்கள் நூலே
ஆங்கார ரீங்கார மெங்கள் நூலே

8. பாகார்ந்த சொல்லறிவ தெங்கள் நூலே
பாராத பண்டமடி எங்கள் நூலே

9. சத்திநிலை கண்டதுவு மெங்கள் நூலே
சாதிமுறை யற்றதடி எங்கள் நூலே

10. முத்தியற முட்டுமடி எங்கள் நூலே
மோகாதி யற்றதடி எங்கள் நூலே

11. இச்சையற நின்றதடி எங்கள் நூலே
எல்லாங் கடந்ததடி எங்கள் நூலே

12. நச்சரவைப் பூண்டதடி எங்கள் நூலே
நாலாறு மற்றதடி எங்கள் நூலே

13. கற்றவருங் காணாதது மெங்கள் நூலே
கண்டவரைக் கண்டதடி எங்கள் நூலே

14. குற்றங் குறைந்ததுறை எங்கள் நூலே
கூடார்த்த மானதடி எங்கள் நூலே

15. ஆதிபரஞ் சோதியடி எங்கள் நூலே
ஆனந்த நிர்க்குணம தெங்கள் நூலே

16. மாது பராசத்தியடி எங்கள் நூலே
மாதவர்க ளுள்ளமது மெங்கள் நூலே

17. சங்கை யறுத்துவிடு மெங்கள் நூலே
சாசுவத மாக்கிவிடு மெங்கள் நூலே

18. தங்கும்பல நிலைய மெங்கள் நூலே
தானென் றிருந்தறிவ தெங்கள் நூலே

19. ஓதாதுணர்ந்த நிலை எங்கள் நூலே
உற்றபடி உள்ளுவது மெங்கள் நூலே

20. போதாரமளியது மெங்கள் நூலே
புத்தரதுபூரணம தெங்கள் நூலே

21. தேகாதி யற்றதடி எங்கள் நூலே
தோராத தேர்மையடி எங்கள் நூலே

22. மோகாதி யில்லாதடி எங்கள் நூலே
மோனநிலை கண்டதுவு மெங்கள் நூலே

23. சித்திநிலை யுற்றதுவு மெங்கள் நூலே
செகமாகி நிற்பதுவு மெங்கள் நூலே

24. எத்திலுற வில்லையடி எங்கள் நூலே
ஏகாந்த தெய்வமடி எங்கள் நூலே

25. மச்சமுனி கண்டதடி எங்கள் நூலே
மாலுங் கடிந்ததடி எங்கள் நூலே

26. செச்சைமணி கொண்டதடி எங்கள் நூலே
சீதரனார் யோகமடி எங்கள் நூலே

27. முன்னங் குழலறிவ தெங்கள் நூலே
முற்றத் துறந்ததுவு மெங்கள் நூலே

28. பின்னங் கழன்றதனி யெங்கள் நூலே
பேசாத பேச்சடியோ எங்கள் நூலே

29. பற்றைத் துறந்ததடி எங்கள் நூலே
பற்றாத வுண்மையடி எங்கள் நூலே

30. அற்றம் பிறிவதில்லை யெங்கள் நூலே
அறிவாகி நின்றதுவு மெங்கள் நூலே

31. ஜோதி சுடரொளிய தெங்கள் நூலே
சூக்குமத்தி னின்றதுவு மெங்கள் நூலே

32. ஓதுமுறையறிவ தெங்கள் நூலே
உற்றவிட முற்றதுவு மெங்கள் நூலே

33. நிஷ்டை கடந்தவிட எங்கள் நூலே
நேராக நிற்பதடி எங்கள் நூலே

34. அஷ்ட குணங்களடி எங்கள் நூலே
அத்வைத நீதியடி எங்கள் நூலே

35. சிஷ்டகுண முள்ளதடி எங்கள் நூலே
சேதனச் சித்தமடி எங்கள் நூலே

36. ஓங்கார முள்ளதுவு மெங்கள் நூலே
ஓங்கார மற்றதடி எங்கள் நூலே

37. வாங்காது செல்வதும் மெங்கள் நூலே
வற்றாத வாரமுதம் எங்கள் நூலே

38. சாதி கடந்தவிடம் எங்கள் நூலே
சமயங் கடந்ததுவு மெங்கள் நூலே

39. ஆதியறிந்ததுவு மெங்கள் நூலே
ஆரியனுய் நிற்பதுவு மெங்கள் நூலே

40. வேதாந்தங் கற்றறிவ தெங்கள் நூலே
வெட்டவெளி கண்டதுவு மெங்கள் நூலே

41. நாதாந்த ஜோதியடி எங்கள் நூலே
நாதர்முடிமேல் விளங்கு மெங்கள் நூலே

42. ஞானுதி யோகமது மெங்கள் நூலே
ஞானமுடி வற்றதுவு மெங்கள் நூலே

43. சேனுதி தத்துவம தெங்கள் நூலே
செய்யாத செய்கையடி எங்கள் நூலே

44. சொற்கள் பிறந்தவிடம் எங்கள் நூலே
ஜோதிநிலே கண்டதடி எங்கள் நூலே

45. சற்குணத்தி னுண்மையடி எங்கள் நூலே
சாந்தமய மானதடி எங்கள் நூலே

46. கால்மாறி யாடியது எங்கள் நூலே
காரிகையருள் பாகமடி எங்கள் நூலே

47. கோலமாறி நின்றதுவு மெங்கள் நூலே
குஞ்சரமு மெஞ்சுமடி எங்கள் நூலே

183246
சென்னை-600 008

48. கோசங் கடந்தநிலை எங்கள் நூலே
கூறான ஞானமடி எங்கள் நூலே

49. நாசி கடந்ததடி எங்கள் நூலே
நான்மறையின் றந்தையடி எங்கள் நூலே

50. மாறுகவந்ததுவு மெங்கள் நூலே
மாறியது வோடியது மெங்கள் நூலே

51. நாராயணன் றுயின்ற தெங்கள் நூலே
நற்றவர்கணுடுவது மெங்கள் நூலே

52 ஆசாரமின்றியது மெங்கள் நூலே
வாசாமகோசரமா மெங்கள் நூலே

53. எண்ணம் பிறந்தவிடம் எங்கள் நூலே
எண்ணம் அடங்குமிட மெங்கள் நூலே

54. தானக நிற்பதுவு மெங்கள் நூலே
தத்துவத்தைத் தாண்டியது மெங்கள் நூலே

55. ஏழேழுங் கண்டதடி எங்கள் நூலே
எட்டியறியாததுவு மெங்கள் நூலே

56. அண்டங் குலைந்தநிதி எங்கள் நூலே
ஆச்சரியமான தடி எங்கள் நூலே

57. யோகர் படித்ததுவு மெங்கள் நூலே
யோகாந்த ஞானமது மெங்கள் நூலே

58. வித்தைநிலை விட்டதுவு மெங்கள் நாலே
விதிகடந்த செல்வமடி எங்கள் நாலே

59. ஏகம்பிரமமடி எங்கள் நாலே
என்றுலுமெண்ணாத தெங்கள் நாலே

60. நூற்கள் நுவலுவது மெங்கள் நாலே
நுண்ணறிவையாயுவது மெங்கள் நாலே

61. எல்லாருங்காண்பதுவு மெங்கள் நாலே
இசைகடந்து நின்றதுவு மெங்கள் நாலே

62. கோசமயமானதடி எங்கள் நாலே
கோசரமதற்றதடி எங்கள் நாலே

63. எஞ்ஞான பூமியல்ல எங்கள் நாலே
இதுவல்ல அதுவல்ல எங்கள் நாலே

64. பாழைக்கடந்ததுவு மெங்கள் நாலே
பராபரமானதடி எங்கள் நாலே

65. துரியங்கடந்ததுவு மெங்கள் நாலே
துரியாதீதத்துளது மெங்கள் நாலே

66. வேதம்விளம்பியது மெங்கள் நாலே
வித்தகனென்றோதுவது மெங்கள் நாலே

67. எட்டெழுத்துமில்லையில்லை எங்கள் நாலே
எட்டாலறிவதில்லை எங்கள் நாலே

68. ஓடித்திரிவதில்லை எங்கள் நூலே
உள்ளிலறிவதுவா மெங்கள் நூலே

69. வாடித்திரிவதில்லை எங்கள் நூலே
வந்தவழிவந்திடுவ தெங்கள் நூலே

70. கோயில் குளங்களில்லை எங்கள் நூலே
குன்றாக நின்றதடி எங்கள் நூலே

71. நாகம்படமெடுக்கு மெங்கள் நூலே
நாட்டிலில்லை யேட்டிலில்லை யெங்கள் நூலே

72. இட்டபடி நிற்பதில்லை யெங்கள் நூலே
ஈசன்றுறவதிலை எங்கள் நூலே

73. நாலாறுமல்லவடி எங்கள் நூலே
நாலாறுக்கப்பால தெங்கள் நூலே

74. சாங்கியர்கள் கண்டதல யெங்கள் நூலே
சாராத சாந்தமடி எங்கள் நூலே

75. புத்தமத மில்லையடி எங்கள் நூலே
பூரணத்தினுள்ளடியோ எங்கள் நூலே

76. விண்டுமதமில்லையடி எங்கள் நூலே
விள்ளாத தானமடி எங்கள் நூலே

77. சைவசமயமிலை யெங்கள் நூலே
ஐவருக்குமில்லையடி எங்கள் நூலே

78. யோகமதமில்லையடி எங்கள் நூலே
யோகங்கடந்தமதம் எங்கள் நூலே

79. மூன்றுமத மில்லையடி எங்கள் நூலே
மும்மூர்த்தியில்லையடி எங்கள் நூலே

80. சொல்லாச்சமயமடி எங்கள் நூலே
சோதனஞ் செய்தற்றதடி எங்கள் நூலே

81. பாரிற்கிடைப்பதில்லை எங்கள் நூலே
பற்றூர்க்கடுப்பதடி எங்கள் நூலே

82. ஏகமதமாகுமடி எங்கள் நூலே
எல்லாருங்காண்பதடி எங்கள் நூலே

83. அனுபவமே உருவமடி எங்கள் நூலே
அதுவுமற்ற போதமடி எங்கள் நூலே

84. மேலேறிக் கண்டதடி எங்கள் நூலே
கண்டதையும் விட்டதடி எங்கள் நூலே

85. காலடக்கிக் காணுதது எங்கள் நூலே
மாலடக்கவந்துவிடு மெங்கள் நூலே

86. ஏறிக்குறைவதில்லை யெங்கள் நூலே
என்றுமொருபடிய தெங்கள் நூலே

87. கும்பகஞ்செய்கெட்டுவது மெங்கள் நூலே
குண்டலியதாகுவது மெங்கள் நூலே

88. காண்பதிலே பூண்பதிலே எங்கள் நூலே
கண்டாற் களிப்பதிலே எங்கள் நூலே

89. கண்டுமனந் துள்ளுவது மெங்கள் நூலே
காணுதலறுவது மெங்கள் நூலே

90. கண்மூடிக்காண்பதில்லே எங்கள் நூலே
கண்விழித்துக்காண்பதிலே எங்கள் நூலே

91. சூனியத்தைக் கண்டதடி எங்கள் நூலே
சூனியத்துக்குள்ளதடி எங்கள் நூலே

92. மும்மோன மற்றதடி எங்கள் நூலே
முக்திமவுனமானதடி எங்கள் நூலே

93. கண்டு கண்டு காணுவது மெங்கள் நூலே
காணு திருப்பதுவு மெங்கள் நூலே

94. வேதாவிதிப்பதிலே எங்கள் நூலே
வேதாந்த வுண்மையடி எங்கள் நூலே

95. ஏதுங்குறிப்பதிலே எங்கள் நூலே
எங்கெங்கு நிற்பதடி எங்கள் நூலே

96. எல்லாமிருப்பதுவு மெங்கள் நூலே
எல்லாங்கடப்பதுவு மெங்கள் நூலே

97. ஆறுறுங்கண்டதிலை எங்கள் நூலே
ஆதாரமாகுமறி வெங்கள் நூலே

98. போக்குவரவற்றதடி எங்கள் நூலே
புண்ணியருக்காகுமடி எங்கள் நூலே

99. தேகாதி விட்டதடி எங்கள் நூலே
தேர்ந்தவரைத் தேர்வதடி எங்கள் நூலே

100. வீதிகடந்தேறுவது மெங்கள் நூலே
படியில்லாதாகுவது மெங்கள் நூலே

101. படிப்படியாயேறுவது மெங்கள் நூலே
வீயாதிருப்பதுவு மெங்கள் நூலே

102. சமயநிலை விட்டதடி எங்கள் நூலே
சந்ததிக்குமில்லையடி எங்கள் நூலே

103. உண்மையவளினுண்மையடி எங்கள் நூலே
உத்தவர்குடிபுகுந்த தெங்கள் நூலே

104. பேச்சுவந்தாற் பேசுமடி எங்கள் நூலே
பிரமனுக்கும் பிரமனடி எங்கள் நூலே

105. கிம்புருடரறியாத தெங்கள் நூலே
கேசரியினந்தமடி எங்கள் நூலே

106. கைகால்களில்லாதடி எங்கள் நூலே
கனகசபை நாட்டமடி எங்கள் நூலே

107. மெய்யாக இல்லையடி எங்கள் நூலே
மேனியிலாப்பிரஹ்மமடி எங்கள் நூலே

108. வாழி வாழி வாழியது மெங்கள் நூலே
வாழி யென்ற வாழியது மெங்கள் நூலே

ஓம் தத் ஸத்.

௫௲௨௭. ௯௰. ௰௧. ௰௯. செவ்வாய்

காலை ௯. நாழிகை.

ஓம்.

ஞானி உயர்ந்த ஜாதி. தத். ஸத். அஞ்ஞானி த[illegible]ழ்ந்த ஜாதி.

க. கடவுளைக் கண்டு முடிந்தவன் பிராமணன்.

உ. கடவுளைக் காணத் தீவிர அப்பியாஸம் செய்பவன் க்ஷத்திரியன்.

ந. கடவுளைக் காண வேண்டிய சாதனங்களைச் சேர்ப்பவன் வைசியன்.

ச. கடவுளைக் காணும் ஆரம்பப்படியி லேறியவன் சூத்திரன்.

ரு. கடவுளைக் காண்பதின் யாதொரு முயற்சியுமின்றியிருப்பவன் பஞ்சமன்.

பிரஹ்ம சாக்ஷாத்காரம். ஜனனமரண நிவர்த்தி.

பரிசுத்தம்	எங்கே	உதயமோ	அங்கே	பக்தி	உதயம்.
பக்தி	எங்கே	உதயமோ	அங்கே	அன்பு	உதயம்.
அன்பு	எங்கே	உதயமோ	அங்கே	சாந்தம்	உதயம்.
சாந்தம்	எங்கே	உதயமோ	அங்கே	சக்தி	உதயம்.
சக்தி	எங்கே	உதயமோ	அங்கே	ஞானம்	உதயம்.
ஞானம்	எங்கே	உதயமோ	அங்கே	கிருபை	உதயம்.
கிருபை	எங்கே	உதயமோ	அங்கே	கடவுள்	உதயம்.
கடவுள்	உதயம்	பெற்றவர்	கடவுளே	ஆகிறார்.	

விலக்ஷணனந்தர்.